மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 410/22 |
| பெயர் | : | வீரசெல்வம் (PW1) |
| த/பெ. | : | மாரியப்பன் |
| வயது | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(A1 Manikandan A2 Maharajan are present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20 th day of February 2025

<u>முதல் விசாரணை</u>

1)நான் வேப்பலோடையில் வசிக்கிறேன்.நான் தூத்துக்குடி தெர்மல் பவர்பிளாண்டில் வேலை செய்கிறேன்.சாட்சி குமாராண்டியை தெரியும்.அவர் என் தாய் மாமா.விபத்தில் இறந்து போன முருகன் என் உடன்பிறந்த அண்ணன்.

2)என் அண்ணன் மீது ஒரு களவு கேஸ் இருந்தது.அதனால் வீட்டிற்கு வரமாட்டார்.10.12.2021 அன்று காலை 10 மணிக்கு என் மாமா குமாராண்டி எங்கள் வீட்டிற்கு ஒரு வேலையாக வந்ததாக சொல்லிவிட்டு சில்லாநத்தம் செல்லும் வழியில் அதற்கு இரண்டு கிலோ மீட்டர் முன்பாக சூரியமுருகன் என்ற தனியார் பேருந்தில் இருந்து முன் படியில் இருந்து ஒரு நபர் கீழே விழுந்ததாகவும் என் மாமா சென்று பார்த்தபோது என் அண்ணன் என்றும் தெரிந்துகொண்டாதாகவும் என் அண்ணனை தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றதாக தகவல் சொன்னார்.

3)நான் மருத்துவமனைக்கு நான் சென்று பார்த்தபோது என் அண்ணன் இறந்துவிட்டார்.அந்த பேருந்தின் பதிவு எண் TN 49 AE 3839.ஆஜர் எதிரிகளை யார் என்று நினைவில் இல்லை.நான் மருத்துவமனையில் வைத்து புகார் மனு கொடுத்தேன்.என்னிடம் காட்டப்படும் புகார்மனு நான் கொடுத்ததுதான் அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையததுதான் அதில் என் மாமா அறிவேன் சாட்சி கையொப்பம் செய்தார்.(**மேற்படி புகார்மனு அசா ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது** ) போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) (எதிரிகள்   ஆஜர்.எதிரிகள்   தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று எதிரிகள்  தரப்பு வழக்கறிஞரால் எடுத்துரைப்பு செய்யப்பட்டது)

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.